# அருப்புக்கோட்டை நகராட்சி

## நகர்மன்ற அவசரக்கூட்டப்பொருள்

நிகழும் திருவள்ளுவராண்டு 2055 குரோதி வருடம் ஆடி மாதம் 15ம் நாள் 2024ம் ஆண்டு 31.07.2024ம் நாள் புதன் கிழமை நன்பகல் 12.00 மணியளவில் அருப்புக்கோட்டை நகர்மன்ற கூட்ட மண்டபத்தில் அவசரக்கூட்டம் நடைபெறும். அதுசமயம் கீழ்க்கண்ட பொருட்கள் மன்ற பரிசீலனைக்கு எடுத்துக்கெள்ளப்படும்

(ஓம்) திருமதி.சி.சுந்தரலட்சுமி

இடம்: அருப்புக்கோட்டை — நகர்மன்றத்தலைவர்

நாள்:29.07.2024 — அருப்புக்கோட்டை நகராட்சி

பொருள்1 : நகராட்சி ஆணையாளர் அவர்களது ஜீலை 2024 மாதத்திற்கான நாட்குறிப்பு மன்றத்தின் பார்வைக்கு வைக்கப்படுகிறது.

அலுவலககுறிப்பு:-

பார்வையிட்டு பதிவு செய்யலாம்.

தீர்மான எண்: 1227

பதிவு செய்யப்பட்டது

பொருள்2 : நகராட்சி பொறியாளர் அவர்களது ஜீலை 2024 மாதத்திற்கான நாட்குறிப்பு மன்றத்தின் பார்வைக்கு வைக்கப்படுகிறது.

அலுவலககுறிப்பு:-

பார்வையிட்டு பதிவு செய்யலாம்.

தீர்மான எண்: 1228

பதிவு செய்யப்பட்டது

பொருள்3: பிறப்பு இறப்பு விவரம் கீழ்க்கண்ட விபரப்படி மன்றத்தின் பார்வைக்கு வைக்கப்படுகிறது.

பதிவு செய்யப்பட்டவை

| | ஜீலை |
|---|---|
| பிறப்பு | 32 |
| இறப்பு | 21 |
| இறந்து பிறந்தவை | -- |

அலுவலகக்குறிப்பு:-

பதிவு செய்யலாம்

தீர்மான எண்: 1229

பதிவு செய்யப்பட்டது

பொருள்4: இந்நகராட்சி சர்வே வார்டு F. பிளாக் எண் 1, நகரளவை எண் 15/29ல் உள்ள 0.68 ஏக்கர் (2772.00ச.மீ) பரப்பளவில் அமைந்துள்ள இடத்தில் குடியிருப்பு மனைப்பிரிவு அனுமதி கோரி திரு.P.சுப்புராஜ் என்பவர் நகர் ஊரமைப்பு துணை இயக்குநர் விருதுநகர் அவர்களுக்கு விண்ணப்பத்தின் பேரில் சாலை வடிவமைப்பு வரைபடம் ஒப்புதல் வழங்கப்பட்டு மேற்படி சாலைகள் அருப்புக்கோட்டை சார்பதிவாளர் அலுவலக ஆவண எண் 3541/2024 நாள் 21.06.2024ல் மனுதாரரால் நகராட்சிக்கு தானமாக வழங்கப்பட்டுள்ளது. மேற்படி மனைப்பிரிவு வரைபடத்திற்கு வரைபட எண் ம.வ/ந.ஊ.து.இ(விருமா) எண் 78/2024, நாள் 18.03.2024ல் மனைப்பிரிவு இசைவு ஒப்புதல் வழங்கப்பட்டுள்ளது. மேற்படி தானமாக பெறப்பட்ட சாலைகளை நகராட்சி அசையாச் சொத்து பதிவேட்டில் பதிவு செய்ய அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலகக்குறிப்பு:–

மன்றம் அனுமதிக்கலாம் ந.க.எண்.2916/2024/எப்1

தீர்மான எண்: 1230

அலுவலகக்குறிப்பு அனுமதிக்கப்பட்டது

பொருள்5:அருப்புக்கோட்டை நகராட்சி பொது சுகாதாரப்பிரிவில் பயன்படுத்த முடியாத நிலையில் உள்ள மூன்று பழைய வாகனங்களை கழிவு நீக்கம் செய்ய தொகுப்பு ஏலத்தொகையாக ரூ.281500/– என நிர்ணயம் செய்யப்பட்டது. ஆனால் பொது ஏலம் யாரும் கோரப்படாத நிலையில் அவ்வாகனங்களுக்கு ஒப்பந்தபுள்ளிகள் கீழ்கண்டவாறு வரப்பெற்றது மேற்படி வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகளின் விபரம் மன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும் சமர்ப்பிக்கப்படுகிறது.

| வ.எண். | நிறுவனத்தின் பெயர் | தொகை ரூ. |
|---|---|---|
| 1 | Thiru.P.Selvam, Sri Krishna Agencies 39–1, Rajapalayam Main Road, Mamasapuram | 2,50,000/– |
| 2 | Thiru.V.Ravi, Sri Elumalaiyan Old Iron Sales, 1/22 H5, Main Bazar, Vaithiyalingapuram, Thiruvilliputhur | 2,81,011/– |
| 3 | Thiru.Nirai Pandiyan Raja, Selvam Traders, 25/13 Mettu Street, 1st Lane, Thiruvilliputhur | 2,85,000/– |

மேற்கண்ட விபரப்படி வரப்பெற்ற மூன்று ஒப்பந்தப்புள்ளிகளில் அதிக ஒப்பந்தபுள்ளி வழங்கிய Thiru.Nirai Pandiyan Raja, Selvam Traders, 25/13 Mettu Street, 1st Lane, Thiruvilliputhur நிறுவனத்தின் ஒப்பந்தபுள்ளியை ஏற்க மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலகக்குறிப்பு:–

மேற்படி பணியின் அவசர அவசியம் கருதி மன்றம் அனுமதி வழங்கலாம்.

ந.க.எண்.6223/2022/எச்1

தீர்மான எண்: 1231

அலுவலகக்குறிப்பு அனுமதிக்கப்பட்டது

பொருள்6: அருப்புக்கோட்டை நகராட்சிக்குட்பட்ட வார்டு எண் 2 கந்தசாமிதெருவில் பொதுமக்கள் குடிநீர் பயன்பாட்டிற்கு சிறுமின்விசை பம்புடன் கூடிய ஆழ்துளைகிணறு வேண்டும் என அப்பகுதி மக்கள் மற்றும் நகர்மன்ற உறுப்பினர் கேட்டுக்கொண்டதால், நகர்மன்ற தலைவர் மற்றும் ஆணையாளரின் அறிவுறுத்தலின் படி இடம் நேரில் சென்று பார்வையிடப்பட்டது. இப்பகுதி மக்களுக்கு தினசரி பயன்பாட்டிற்கு குடிநீர் வசதி இல்லாதாதால் மிகவும் சிரமப்படுவதாகவும், உடன் மினிபவர்பம்ப் அமைத்து தரும்படி கேட்டுக்கொண்டனர். எனவே குடிநீர் பணியின் அவசர அவசியம் கருதி இப்பணி மேற்கொள்வது அவசியமாகும். இதற்கு உண்டான உத்தேச மதிப்பீட்டுத்தொகை ரூ.2.30 இலட்சத்தினை குடிநீர் நிதியின் கீழ் மேற்கொள்ளவும் மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலகக்குறிப்பு:–

மன்றம் அனுமதிக்கலாம் ந.க.எண்.3397/2024/இ1

தீர்மான எண்: 1232

அலுவலகக்குறிப்பு அனுமதிக்கப்பட்டது

பொருள்7: அருப்புக்கோட்டை நகராட்சியில் தூய்மை பணியாளராக பணிபுரிந்து 31.05.2018 அன்று ஓய்வு பெற்ற திரு.மு.கொண்டசாமி என்பவர் தனக்கு ஓய்வூதியம் வழங்கக்கோரி ஓய்வூதிய முன்மொழிவுகள் அனுப்பப்பட்டது. அனுப்பப்பட்ட முன்மொழிவுகளில் அன்னாரது பணிப்பதிவேட்டில் 14.02.2001 முதல் ஏற்ற முறை ஊதியத்தில் பணியமர்த்தப்பட்டுள்ளது என சுட்டிக்காட்டப்பட்டு திரும்ப வரப்பெற்றுள்ளது. அதனை தொடர்ந்து அன்னாரால் சென்னை உயர்நீதிமன்ற மதுரை கிளையில் தொடரப்பட்ட வழக்கு எண் W.P.(MD) No.9722 of 2024ன்படி வழக்கு தொடர்ந்துள்ளார். அதன்படி இந்நகராட்சி ஆணையாளரை பிரதிவாதியாக சேர்த்து தொடரப்பட்ட வழக்கிற்கு இந்நகராட்சி சார்பாக திரு.என்.திலீப்குமார் வழக்கறிஞர் மேற்படி வழக்கினை ஆஜராகி நடத்துவதற்கும் வழக்கறிஞர் கட்டணம் ரூ.9500/-யை திரு.என்.திலீப்குமார் வழக்கறிஞர் அவர்களுக்கு வழங்க மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**<u>அலுவலகக்குறிப்பு:-</u>**

**மன்றம் அனுமதிக்கலாம்** ந.க.எண்.7055/2018/பி2

**தீர்மான எண்: 1233**

**அலுவலகக்குறிப்பு அனுமதிக்கப்பட்டது**

பொருள்8: அரசாணை நிலை எண் 92 நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை நாள் 03.07.2007ன் படி அருப்புக்கோட்டை நகராட்சிக்கு சொந்தமான கீழ்க்கண்ட விபரப்படி உள்ள கடைகளுக்கு மூன்றாண்டு காலம் முடிவடைவதால் ஏற்கனவே உள்ள வாடகை மதிப்பிலிருந்து 15 சதவீதம் உயர்வு செய்து மேலும் மூன்றாண்டுகளுக்கு கீழ்கண்டவாறு உரிமத்தை புதுப்பித்து வழங்க மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

| வ. எண். | வரிவிதிப்பு எண் | கடை எண் | குத்தகை தாரர் பெயர் | உரிமம் முடிவடையும் தேதி | ஏற்கனவே உள்ள மாத வாடகை | உயர்வு செய்யப்பட வேண்டிய தொகை (15 சதவீதம்) | மொத்தம் |
|---|---|---|---|---|---|---|---|
| பழைய பேருந்து நிலைய உள்பக்க கடைகள் | | | | | | | |
| 1 | 126/90 | கடை எண் 4 | ராஜபாண்டியன் | 30.06.2024 | 2592 | 389 | 2981 |
| 2 | 126/92 | கடை எண் 6 | முத்துவேல்பாண்டியன் | 30.06.2024 | 2592 | 389 | 2981 |
| 3 | 126/126 | கடை எண் 11 | காளிராஜன் | 31.07.2024 | 3457 | 519 | 3976 |
| 4 | 126/127 | கடை எண் 10 | ஆறுமுகம் | 31.07.2024 | 2592 | 389 | 2981 |
| 5 | 126/BD01/00013 | கடை எண் 1 | பாண்டி | 31.03.2024 | 4255 | 638 | 4893 |
| 6 | 126/BD01/00012 | கடை எண் 2 | பாண்டி | 31.03.2024 | 4255 | 638 | 4893 |
| திருச்சுழி ரோடு கடைகள் | | | | | | | |
| 7 | 126/BD01/102 | கடை எண் 2 | மகமுதாபேகம் | 31.08.2024 | 2818 | 422 | 3241 |

அலுவலகக்குறிப்பு:-

1. அரசாணை (நிலை) எண் 92 நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை நாள் 03.07.2007ல் தெரிவிக்கப்பட்டுள்ள நெறிமுறைகளின்படி மேற்கண்ட மூன்றாண்டு முடிவுற்ற கடைகளுக்கு மூன்றாண்டுகளுக்கு ஒருமுறை குத்தகைத் தொகை 15% (பதினைந்து சதவீதம்) உயர்த்தி வசூலிக்கவும் மற்றும் புதுப்பித்தல் கட்டணம் வசூலிக்கவும் மன்றம் அனுமதி அளிக்கலாம்.
2. மேற்கண்ட கடையின் உரிமதாரர்களுக்கு அறிவிப்பு வழங்கப்பட்டு உரிய தேதியில் புதுப்பித்தல் கட்டணம் மற்றும் 15% உயர்த்தப்பட்ட தொகையினை செலுத்தத் தவறினால் கடையினை மறுஏலம் விடவும் மன்றம் அனுமதி அளிக்கலாம்.

ந.க.எண்.11271/2018/அ1

தீர்மான எண்: 1234

அலுவலகக்குறிப்பு அனுமதிக்கப்பட்டது

பொருள்9: இந்நகராட்சி நேதாஜி ரோடு நகராட்சி மையம் வளாகத்தில் நாய் கருத்தடை மையம் உள்ளது. இதில் பராமரிப்பு மற்றும் மராமத்து பணிகள் செய்யப்பட்டு முடிவுறும் தருவாயில் உள்ளது. நாய்கள் கருத்தடை செயலாக்கத்திற்கான உபகரணங்கள் இந்நகராட்சியில் இல்லை. எனவே கருத்தடை செய்வதற்கான சாதனங்கள் உடனடியாக வாங்கலாம். நகராட்சி நிர்வாக மண்டல இயக்குநர், திருநெல்வேலி அவர்களது நேரடி அறிவுரையின் பேரில் 15.08.2024க்குள் நாய் கருத்தடை மையத்தினை செயல்படுத்திட அறிவுரை வழங்கியதின் அடிப்படையில் உடனடியாக வாங்குவதற்கு உத்தேச மதிப்பீட்டுத்தொகை ரூ.5.00இலட்சத்தினை நகராட்சி வருவாய் நிதியின் கீழ் மேற்கொள்ள மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலகக்குறிப்பு:-

மன்றம் அனுமதிக்கலாம் ந.க.எண்.3347/2024/இ1

தீர்மான எண்: 1235

அலுவலகக்குறிப்பு அனுமதிக்கப்பட்டது

பொருள்10: அருப்புக்கோட்டை நகராட்சிக்கு உட்பட்ட வார்டு எண் 17, மலையரசன் கோவில் கிழமேல் தெருவில் உள்ள அருள்மிகு சீலைக்காரி தில்லைச் சிவகாமி அம்மன் கோவில் கமிட்டியாரின் 30.07.2024ம் தேதிய விண்ணபத்தில் கோவிலுக்கு வரிவிதிப்பு இல்லாச் சான்று வழங்கக் கோரி விண்ணப்பம் செய்துள்ளனர். மேற்படி விண்ணபத்துடன் தானசெட்டில்மெண்ட் பத்திரம் ஆவணம் எண் 4310/2014 நாள் 05.09.2014ஐ இணைத்து சமர்ப்பித்துள்ளனர். மேலும் தானசெட்டில்மெண்ட் பத்திரத்தின்படி, இத்திருக்கோவில் சாலியர் சமுதாயத்திற்கு பாத்தியப்பட்ட திருக்கோவிலுக்கு சொந்தமானது ஆகும். மேற்படி இடமானது வருவாய் உதவியாளர் மற்றும் வருவாய் ஆய்வாளரால் நேரில் ஆய்வு செய்து கோவில் பயன்பாடாக உள்ளதாக அறிக்கை சமர்ப்பித்துள்ளனர். அதனடிப்படையில் மேற்படி இடத்தில் திருக்கோவில் கட்டப்பட்டு கோவில் பயன்பாடாக உள்ளபடியால் தமிழ்நாடு நகராட்சிகளின் சட்டம் 87 விதி எண் 267ன் கீழ் வரியில்லாச் சான்று வழங்க மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலகக்குறிப்பு:-

மன்றம் அனுமதிக்கலாம் ந.க.எண்.2583/2024/அ1

தீர்மான எண்: 1236

அலுவலகக்குறிப்பு அனுமதிக்கப்பட்டது

பொருள்11: இந்நகராட்சி வார்டு எண் 9 முஸ்லீம் தெருவில் பழைய அங்கன்வாடி மைய கட்டிடத்தை இடித்துவிட்டு புதியதாக கட்டிடம் கட்டும் பணிக்கு தயார் செய்யப்பட்ட மதிப்பீட்டுத்தொகை ரூ.14.00 இலட்சம் ஆகும் மேற்படி பணிக்கு திட்ட இயக்குநர், மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை சி3/4114/2023 நாள் 21.06.2024 ன்படி சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டுததிட்டம் 2023–24 திட்டத்தின் கீழ் ஒதுக்கப்பட்ட தொகை ரூ.12.00 இலட்சம் போக மீதத்தொகை ரூ.2.00 இலட்சத்தினை நகராட்சி வருவாய் நிதியின் கீழ் மேற்கொள்ள மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலககுறிப்பு:–

மன்றம் அனுமதிக்கலாம். ந.க.எண்.1056/2023/இ1

தீர்மான எண்: 1237

அலுவலகக்குறிப்பு அனுமதிக்கப்பட்டது

பொருள்12: இந்நகராட்சிக்கு சொந்தமான ஜவஹர் சங்கத் தெரு கடை எண் 2க்கு மாத வாடகை அடிப்படையில் குத்தகை உரிமம் பெற்ற திரு.சதிஷ்குமார் என்பவர் கடையினை நடத்த இயலாது எனவும் மற்றும் நகராட்சிக்கு செலுத்த வேண்டிய வாடகைத் தொகையினை தனது முன்வைப்புத் தொகையிலிருந்து ஈடு செய்து கொள்ளவும் சம்மதம் தெரிவித்து நகராட்சி வசம் கடையினை ஒப்படைத்துள்ளார். மேலும் அன்னார் செலுத்த வேண்டிய மாத வாடகைத் தொகையினை (வரிகள் உட்பட) அன்னாரது முன்வைப்புத் தொகையிலிருந்து ஈடுசெய்யவும் மற்றும் கடையினை நககராட்சி வசம் எடுத்து பொது ஏலத்தில் விடவும் மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலககுறிப்பு:–

1. மன்றம் அனுமதி வழங்கலாம்.
2. மேற்படி கடையின் குத்தகை உரிமதாரர் திரு.சதீஷ்குமார் என்பவர் செலுத்த வேண்டிய வாடகைத் தொகையினை (வரிகள் உட்பட) அன்னாரது முன்வைப்புத்தொகை ரூ.50,000/– லிருந்து ஈடு செய்வதற்கும் மற்றும் தொடர்ந்து மேற்படி கடைக்கு கேட்பு எழுப்பப்படாமல் இருப்பதற்கு Allotment Cancellation மூலம் குத்தகை உரிமத்தை நீக்கம் செய்வதற்கும் மன்றம் அனுமதி வழங்கலாம். ந.க.எண்.6227/2013/அ1

தீர்மான எண்: 1238

அலுவலகக்குறிப்பு அனுமதிக்கப்பட்டது

பொருள்13: அருப்புக்கோட்டை டவுன் சர்வே வார்டு. சி, பிளாக் எண் 25, நகரளவை எண் 9/35 (சர்வே எண் 126/1) ல் உள்ள பொது உபயோகப்பயன்பாட்டில் உள்ள இடத்தை நகராட்சி ஆணையாளர் பெயருக்கு பட்டா மாறுதல் செய்வது தொடர்பான சட்டக்கருத்துரையினை நகராட்சி வழக்கறிஞர் திரு.எ.பாஸ்கரன், அவர்களிடம் கோரப்பட்டது, மேற்படி சட்டக்கருத்துரைக்கான கட்டண தொகை ரூ.3000/– நகராட்சி வழக்கறிஞருக்கு வழங்க மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலககுறிப்பு:–

மன்றம் அனுமதிக்கலாம். ந.க.எண்.5253/2024/எப்1

தீர்மான எண்: 1239

அலுவலகக்குறிப்பு அனுமதிக்கப்பட்டது

பொருள்14: அருப்புக்கோட்டை நகராட்சி எல்லைக்குட்பட்ட பகுதிகளில் கட்டிட/திட்ட அனுமதி கோரி பெறப்படும் விண்ணப்பங்களுக்கு கட்டிட உரிமையாளரின் சுயசான்றின் அடிப்படையில் 2500 சதுர அடி வரை பரப்பளவுள்ள மனையில் 3500 சதுர அடி வரையிலான தரைத்தளம் (அ) தரைத்தளத்துடன் கூடிய முதல் தளம் குடியிருப்புக் கட்டடங்கள் கட்ட இணையவழி (Single Window Portal) கட்டட அனுமதி வழங்குவதற்கு செலுத்தவேண்டிய ஒருங்கிணைந்த கட்டணங்களை நிர்ணயம் செய்து வரப்பெற்ற (அரசாணை நிலை) எண். 94, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் (நி.நி.1) துறை நாள் 18.07.2024 மன்றத்தின் பார்வைக்கும் தகவலுக்கும்

அலுவலககுறிப்பு:–

மன்றம் அனுமதிக்கலாம். ந.க.எண்.1602/2024/எப்1

தீர்மான எண்: 1240

அலுவலகக்குறிப்பு அனுமதிக்கப்பட்டது

பொருள்15: அருப்புக்கோட்டை நகராட்சிக்குட்பட்ட வார்டு எண் 3 நெசவாளர் காலனி 14வது தெருவில் பொதுமக்கள் குடிநீர் பயன்பாட்டிற்க்கு மினிபவர்பம்ப் அமைத்து தரவேண்டும் எனவே நகர்மன்ற தலைவர் மற்றும் ஆணையாளரின் அறிவுறுத்தலின் படி இடம் நேரில் சென்று பார்வையிடப்பட்டது. இப்பகுதி மக்களுக்கு தினசரி தேவைக்கு பயன்படும் குடிநீர் இல்லாததால் மிகவும் சிரமப்படுவதாகவும் எனவே சிறுமின்விசை பம்பு அமைத்து தரும்படி கேட்டுக்கொண்டனர். எனவே குடிநீர் பணியின் அவசர அவசியம் கருதி இப்பகுதியில் அமைப்பது அவசியமாகும். இப்பணிக்கான உத்தேச மதிப்பீட்டுத்தொகை ரூ.2.30 இலட்சத்திற்கு குடிநீர் நிதியின் கீழ் பணி மேற்கொள்ளவும் மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது

அலுவலககுறிப்பு:–

மன்றம் அனுமதிக்கலாம். ந.க.எண்.3398/2024/இ1

தீர்மான எண்: 1241

அலுவலகக்குறிப்பு அனுமதிக்கப்பட்டது

பொருள்16: அருப்புக்கோட்டை நகராட்சி பொது சுகாதார பிரிவின் பயன்பாட்டில் இருந்து வந்த வாகன எண் TN 67 AH 8606 வாகனத்திற்கு தகுதிச்சான்று புதுப்பித்து வாகனத்தில் உள்ள பழுது பணிகள் பார்க்க அரசாணை எண் 983, Home (Transport IV) நாள் 03.08.2004 கனரக வாகனங்களுக்கு 10 வருடங்களுக்கு மேல் பழுது பணிகள் பார்க்க வருடத்திற்கு ரூ.15000/– வரை அனுமதிக்கப்பட்டுள்ளது. தற்போது வாகனத்தில் ஏற்பட்டுள்ள பழுதினை சரிசெய்வதற்காகும் உத்தேச மதிப்பீட்டுத்தொகை ரூ.1,85,000/– ஆகும். மேற்படி வாகனமானது நகர் பகுதிகளில் திடக்கழிவு மேலாண்மை பணிகள் மேற்கொண்டதினால் தேய்மானம் அதிகமாகவும் கூடுதலாகவும் உள்ளது. எனவே அரசு நிர்ணயிக்கப்பட்ட தொகையினை விட கூடுதலாக பராமரிப்பு செலவினங்கள் பொது சுகாதார அவசர அவசியம் கருதி மேற்கொள்ள வேண்டிய அத்தியாவசியமாக உள்ளது. எனவே இந்த கூடுதல் செலவீனத்திற்கு நகராட்சி நிர்வாக ஆணையர் சென்னை அவர்களின் உரிய பின்னேற்வு பெறுவதற்கும் மன்றம் ஒப்புதல் வழங்கலாம்.

அலுவலககுறிப்பு:–

மன்றம் அனுமதிக்கலாம். ந.க.எண்.2386/2024/எச்1

தீர்மான எண்: 1242

அலுவலகக்குறிப்பு அனுமதிக்கப்பட்டது

பொருள்17: அருப்புக்கோட்டை நகராட்சி பொது சுகாதார பிரிவின் பயன்பாட்டில் இருந்து வந்த வாகன எண் TN 67 AB 6892 வாகனத்திற்கு தகுதிச்சான்று புதுபித்து வாகனத்தில் உள்ள பழுது பணிகள் பார்க்க அரசாணை எண் 983, Home (Transport IV) நாள் 03.08.2004 கனரக வாகனங்களுக்கு 10 வருடங்களுக்கு மேல் பழுது பணிகள் பார்க்க வருடத்திற்கு ரூ.15000/- வரை அனுமதிக்கப்பட்டுள்ளது. தற்போது வாகனத்தில் ஏற்பட்டுள்ள பழுதினை சரிசெய்வதற்காகும் உத்தேச மதிப்பீட்டுத்தொகை ரூ.1,85,000/- ஆகும் மேற்படி வாகனமானது நகர் பகுதிகளில் திடக்கழிவு மேலாண்மை பணிகள் மேற்கொண்டதினால் தேய்மானம் அதிகமாகவும் கூடுதலாகவும் உள்ளது. எனவே அரசு நிர்ணயிக்கப்பட்ட தொகையினை விட கூடுதலாக பராமரிப்பு செலவினங்கள் பொது சுகாதார அவசர அவசியம் கருதி மேற்கொள்ள வேண்டிய அத்தியாவசியமாக உள்ளது. எனவே இந்த கூடுதல் செலவீனத்திற்கு நகராட்சி நிர்வாக ஆணையர் சென்னை அவர்களின் உரிய பின்னேற்வு பெறுவதற்கும் மன்றம் ஒப்புதல் வழங்கலாம்.

அலுவலககுறிப்பு:-

மன்றம் அனுமதிக்கலாம். ந.க.எண்.2387/2024/எச்1

தீர்மான எண்: 1243

அலுவலகக்குறிப்பு அனுமதிக்கப்பட்டது

பொருள்18: வருவாய் நிதி 2023-2024ன் கீழ் அருப்புக்கோட்டை நகராட்சி வார்டு எண் 10 முஸ்லீம் நடுத்தெரு, மீரா மருத்துவமனை சாலையில் பேவர்பிளாக் தளம் அமைக்கும் பணி மேற்கொள்வதற்கு மதிப்பீட்டுத்தொகை ரூ.9.90 இலட்சத்திற்கு மேற்கொள்வதற்கு நகர்மன்றத் தீர்மான எண் 1002, நாள் 30.01.2024ன்படி அனுமதி பெறப்பட்டுள்ளது.

அதன்பேரில் 15.03.2024 அன்று ஒப்பந்தபுள்ளி கோரப்பட்டதில் கீழ்கண்டவாறு வரப்பெற்றுள்ள ஒப்பந்தப்புள்ளிகள் மன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

| வ.எண். | ஒப்பந்ததாரர் பெயர் | ஒப்பந்தப்புள்ளி விபரம் |
|---|---|---|
| 1. | திரு.M.N.எர்ஷாத்கான் அருப்புக்கோட்டை | மதிப்பீட்டு விலைக்கே |
| 2. | திரு.N.காத்தூன்பீவி அருப்புக்கோட்டை | 0.88% மதிப்பீட்டு தொகையை விட அதிகமாக |

<u>அலுவலகக்குறிப்பு:-</u>

1. வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில், மதிப்பீட்டு விலைக்கே கொடுத்துள்ள திரு.M.N.எர்ஷாத்கான், அருப்புக்கோட்டை அவர்களின் ஒப்பந்த புள்ளியை ஏற்க மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.
2. மேலும் மேற்கண்ட பணியின் அவசர அவசியத்தை கருதி நகர்மன்ற தலைவர் அவர்களின் முன் அனுமதி பெற்று வேலை உத்தரவு வழங்கியதையும் மன்றம் அங்கீகரிக்கலாம். ந.க.எண்.0486/2024/இ1

தீர்மான எண்: 1244

அலுவலகக்குறிப்பு அனுமதிக்கப்பட்டது

பொருள்19: வருவாய் நிதி 2023-2024ன் கீழ் அருப்புக்கோட்டை நகராட்சி வார்டு எண் 6 இரயில்வே ஸ்டசன் ரோடு சாலையில் பேவர்பிளாக் தளம் அமைக்கும் பணிக்கு மேற்கொள்வதற்கு மதிப்பீட்டுத்தொகை ரூ.9.90 இலட்சத்திற்கு மேற்கொள்வதற்கு நகர்மன்றத் தீர்மான எண் 1038, நாள் 31.01.2024ன்படி அனுமதி பெறப்பட்டுள்ளது.

அதன்பேரில் 15.03.2024 அன்று ஒப்பந்தபுள்ளி கோரப்பட்டதில் கீழ்கண்டவாறு வரப்பெற்றுள்ள ஒப்பந்தப்புள்ளிகள் மன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

| வ.எண். | ஒப்பந்ததாரர் பெயர் | ஒப்பந்தப்புள்ளி விபரம் |
|---|---|---|
| 1. | திரு.M.N.எர்ஷாத்கான் அருப்புக்கோட்டை | மதிப்பீட்டு விலைக்கே |
| 2. | திரு.M.N.காத்தூன்பீவி அருப்புக்கோட்டை | 0.57% மதிப்பீட்டு தொகையை விட அதிகமாக |

<u>அலுவலகக்குறிப்பு:-</u>

1. வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில், மதிப்பீட்டு தொகைக்கே கொடுத்துள்ள திரு.M.N.எர்ஷாத்கான், அருப்புக்கோட்டை அவர்களின் ஒப்பந்த புள்ளியை ஏற்க மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.
2. மேலும் மேற்கண்ட பணியின் அவசர அவசியத்தை கருதி நகர்மன்ற தலைவர் அவர்களின் முன் அனுமதி பெற்று வேலை உத்தரவு வழங்கியதையும் மன்றம் அங்கீகரிக்கலாம். ந.க.எண்.0588/2024/இ1

தீர்மான எண்: 1245

அலுவலகக்குறிப்பு அனுமதிக்கப்பட்டது

பொருள்20: வருவாய் நிதி 2023-2024ன் கீழ் அருப்புக்கோட்டை நகராட்சி வார்டு எண் 1 முதல் 18 வரை உள்ள பகிர்மான குழாய், உந்துகுழாய் பிரதான குழாய்களில் உடைப்புகளை சரிசெய்யும் பணி மேற்கொள்வதற்கு மதிப்பீட்டுத்தொகை ரூ.9.80 இலட்சத்திற்கு மேற்கொள்வதற்கு நகர்மன்றத் தீர்மான எண் 1177, நாள் 28.06.2024ன்படி அனுமதி பெறப்பட்டுள்ளது.

அதன்பேரில் 12.07.2024 அன்று ஒப்பந்தபுள்ளி கோரப்பட்டதில் கீழ்கண்டவாறு வரப்பெற்றுள்ள ஒப்பந்தப்புள்ளிகள் மன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

| வ.எண். | ஒப்பந்ததாரர் பெயர் | ஒப்பந்தப்புள்ளி விபரம் |
|---|---|---|
| 1. | திரு.A.P.மோகன்குமார் அருப்புக்கோட்டை | 0.48% மதிப்பீட்டு தொகையை விட அதிகமாக |
| 2. | திரு.L.தாமோதரன் அருப்புக்கோட்டை | 0.07% மதிப்பீட்டு தொகையை விட குறைவாக |

<u>அலுவலகக்குறிப்பு:-</u>

வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில், மதிப்பீட்டு விலையைவிட 0.07% குறைவாக கொடுத்துள்ள திரு.L.தாமோதரன், அருப்புக்கோட்டை அவர்களின் ஒப்பந்த புள்ளியை ஏற்க மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

ந.க.எண்.2701/2024/இ1

தீர்மான எண்: 1246

அலுவலகக்குறிப்பு அனுமதிக்கப்பட்டது

பொருள்21: வருவாய் நிதி 2023-2024ன் கீழ் அருப்புக்கோட்டை நகராட்சி வார்டு எண் 19 முதல் 36 வரை உள்ள பகிர்மான குழாய், உந்துகுழாய் பிரதான குழாய்களில் உடைப்புகளை சரிசெய்யும் பணி மேற்கொள்வதற்கு மதிப்பீட்டுத்தொகை ரூ.9.50 இலட்சத்திற்கு மேற்கொள்வதற்கு நகர்மன்றத் தீர்மான எண் 1178, நாள் 28.06.2024ன்படி அனுமதி பெறப்பட்டுள்ளது.

அதன்பேரில் 12.07.2024 அன்று ஒப்பந்தபுள்ளி கோரப்பட்டதில் கீழ்கண்டவாறு வரப்பெற்றுள்ள ஒப்பந்தப்புள்ளிகள் மன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

| வ.எண். | ஒப்பந்ததாரர் பெயர் | ஒப்பந்தப்புள்ளி விபரம் |
|---|---|---|
| 1. | திரு.A.P.மோகன்குமார் அருப்புக்கோட்டை | 4.12% மதிப்பீட்டு தொகையை விட அதிகமாக |
| 2. | திரு.S.சங்கரன் அருப்புக்கோட்டை | 0.001% மதிப்பீட்டு தொகையை விட குறைவாக |

அலுவலகக்குறிப்பு:-

வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில், மதிப்பீட்டு விலையைவிட 0.001% குறைவாக கொடுத்துள்ள திரு.S.சங்கரன், அருப்புக்கோட்டை அவர்களின் ஒப்பந்த புள்ளியை ஏற்க மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

ந.க.எண்.2701/2024/இ1

தீர்மான எண்: 1247

அலுவலகக்குறிப்பு அனுமதிக்கப்பட்டது

பொருள்22: அருப்புக்கோட்டை நகராட்சிக்கு சொந்தமான நகராட்சி பள்ளிகளுக்கு தினகரன் அறிவொளி திட்டத்தின் கீழ் தினசரி தினகரன் நாளிதழ் விநியோகம் செய்ய ஒரு வருடத்திற்கு ஆகும் உத்தேச செலவினத்தொகை ரூ.50,000/-க்கான மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

நகராட்சி பள்ளிகள் கீழ்கண்டவாறு:-

1. நெசவாளர் காலனி நகராட்சி உயர்நிலைப்பள்ளி
2. நெசவாளர் காலனி நகராட்சி துவக்கப்பள்ளி
3. மதுரை ரோடு நகராட்சி நடுநிலைப்பள்ளி
4. மேலரதவீதி நகராட்சி நடுநிலைப்பள்ளி
5. இராமசாமிபுரம் நகராட்சி துவக்கப்பள்ளி

அலுவலகக்குறிப்பு:-

மன்றம் அனுமதிக்கலாம். ந.க.எண்.3219/2024/எச்2

தீர்மான எண்: 1248

அலுவலகக்குறிப்பு அனுமதிக்கப்பட்டது

பொருள்23: அருப்புக்கோட்டை நகராட்சிக்கு நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை G.O(MD) No. 35 MAWS Department Dt.18.08.2023ன் படி கலைஞர் நகர்ப்புற மேம்பாட்டுத்திட்டம் 2023-24ன் கீழ் நகராட்சிக்குட்பட்ட செவல்கண்மாயில் புனரமைப்பு பணிகள் மேற்கொள்வதற்கு மதிப்பீட்டுத்தொகை ரூ.445.00 இலட்சத்திற்கு நிர்வாக அனுமதி வழங்கப்பட்டதனை தொடர்ந்து தலைமை பொறியாளர், நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை அவர்களின் கடித எண் 18484/2023/D01 நாள் 01.09.2023ன்படி தொழில்நுட்ப அனுமதி பெறப்பட்டு 07.02.2024 தேதியின்படி M/s.Everlasting Constructions, Tiruppur – 03 என்ற நிறுவனத்திற்கு வழங்கப்பட்டு பணிகள் நடைபெற்றுவருகிறது. இப்பணிக்கு வழங்கப்பட்ட தொழில் நுட்ப அனுமதியின் படி ஆகயாத்தாமரைகள் மற்றும் கண்மாயில் தேங்கியுள்ள கழிவுநீரினை அகற்றுவதற்கு வழிவகை செய்யப்படவில்லை.

தற்போது கண்மாயில் மிக அதிக அளவில் ஆகாயத்தாமரைகளும், கழிவுநீர் கலந்தும் துர்நாற்றம் வீசுகிறது.

எனவே மேற்படி கண்மாயில் புனரமைப்பு பணியில் மதிப்பீட்டில் வழிவகை செய்யப்படாத கழிவு நீர் மற்றும் ஆகாயத்தாமரை அகற்றும் பணிக்கு ஆகும் உத்தேச செலவீனத்தொகையினை நகராட்சி வருவாய் நிதியின் கீழ் மேற்கொள்ள மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

<u>அலுவலகக்குறிப்பு:-</u>

**மன்றம் அனுமதிக்கலாம்** ந.க.எண்.5081/2024/இ1

**தீர்மான எண்: 1249**

**அலுவலகக்குறிப்பு அனுமதிக்கப்பட்டது**

பொருள்24: செவல்கண்மாய் பல வருடங்களாக தூர்வாரப்படாத நிலையில் ஆகாயத்தாமரைகள் வளர்ந்தும் கழிவுநீர் கலந்தும் மிகவும் துர்நாற்றம் வீசுகிறது. ஆகாயத்தாமரைகள், கழிவுநீரனை அகற்றி வளர்ச்சிப்பணிகள் செய்து தருமாறு வார்டு உறுப்பினர் கோரிக்கை வைத்துள்ளனர். அதன்படி செவல்கண்மாய் பொறியாளரால் தல ஆய்வு செய்யப்பட்டது.

நகராட்சி தலைவர், நகராட்சி ஆணையாளர் மற்றும் நகராட்சி பொறியாளர் அவர்களது நேரடி அறிவுரையின்படி செவல்கண்மாய் ரோட்டிலிருந்து மேட்டுத்தெரு முதல் 0-70 மீட்டர் வரை ஆகாயத்தாமரை மற்றும் கழிவுநீர் அகற்றுவதற்கு தயார் செய்யப்பட்ட உத்தேச மதிப்பீட்டுத்தொகை ரூ.9.98 இலட்சத்தினை நகராட்சி வருவாய் நிதியின் கீழ் மேற்கொள்ள மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

<u>அலுவலகக்குறிப்பு:-</u>

**மன்றம் அனுமதிக்கலாம்** ந.க.எண்.2696/2024/இ1

**தீர்மான எண்: 1250**

**அலுவலகக்குறிப்பு அனுமதிக்கப்பட்டது**

பொருள்25: செவல்கண்மாய் பல வருடங்களாக தூர்வாரப்படாத நிலையில் ஆகாயத்தாமரைகள் வளர்ந்தும் கழிவுநீர் கலந்தும் மிகவும் துர்நாற்றம் வீசுகிறது. ஆகாயத்தாமரைகள், கழிவுநீரனை அகற்றி வளர்ச்சிப்பணிகள் செய்து தருமாறு வார்டு உறுப்பினர் கோரிக்கை வைத்துள்ளனர். அதன்படி செவல்கண்மாய் பொறியாளரால் தல ஆய்வு செய்யப்பட்டது.

நகராட்சி தலைவர், நகராட்சி ஆணையாளர் மற்றும் நகராட்சி பொறியாளர் அவர்களது நேரடி அறிவுரையின்படி செவல்கண்மாய் ரோட்டிலிருந்து மேட்டுத்தெருவிலிருந்து 0.71 மீட்டர் முதல் 130 மீட்டர் வரை ஆகாயத்தாமரை மற்றும் கழிவுநீர் அகற்றுவதற்கு தயார் செய்யப்பட்ட உத்தேச மதிப்பீட்டுத்தொகை ரூ.9.99 இலட்சத்தினை நகராட்சி வருவாய் நிதியின் கீழ் மேற்கொள்ள மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

<u>அலுவலகக்குறிப்பு:-</u>

**மன்றம் அனுமதிக்கலாம்** ந.க.எண்.2698/2024/இ1

**தீர்மான எண்: 1251**

**அலுவலகக்குறிப்பு அனுமதிக்கப்பட்டது**

பொருள்26: சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டுத்திட்டம் 2023-2024ன் கீழ் அருப்புக்கோட்டை நகராட்சி வார்டு எண் 9 முஸ்லீம் பாவடித்தெருவில் அங்கன்வாடி மையக் கட்டிடம் கட்டும் பணி மேற்கொள்வதற்கு மதிப்பீட்டுத்தொகை ரூ.12.00 இலட்சத்திற்கு மேற்கொள்வதற்கு விருதுநகர் மாவட்ட ஊரக வளர்ச்சி முகமையின் தலைவர்/மாவட்ட ஆட்சியர் அவர்களின் செயல்முறை ஆணை எண். சி3/4114/2023 நாள் 09.07.2024ன்படி அனுமதி பெறப்பட்டுள்ளது.

அதன்பேரில் 24.07.2024 அன்று ஒப்பந்தபுள்ளி கோரப்பட்டதில் கீழ்கண்டவாறு வரப்பெற்றுள்ள ஒப்பந்தப்புள்ளிகள் மன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

| வ.எண். | ஒப்பந்ததாரர் பெயர் | ஒப்பந்தப்புள்ளி விபரம் |
|---|---|---|
| 1. | திரு.N.எர்ஷாத்கான்<br>அருப்புக்கோட்டை | 0.01% மதிப்பீட்டு<br>தொகையை விட குறைவாக |
| 2. | திரு.N.காத்தூன்பீவி<br>அருப்புக்கோட்டை | 1.07% மதிப்பீட்டு<br>தொகையை விட அதிகமாக |

<u>அலுவலகக்குறிப்பு:-</u>

வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில், மதிப்பீட்டு விலையைவிட 0.01% குறைவாக கொடுத்துள்ள திரு.N.எர்ஷாத்கான், அருப்புக்கோட்டை அவர்களின் ஒப்பந்த புள்ளியை ஏற்க மன்றத்தின் அனுமதி வேண்டடப்படுகிறது.

ந.க.எண்.1056/2023/இ1

**தீர்மான எண்: 1252**

**அலுவலகக்குறிப்பு அனுமதிக்கப்பட்டது**

பொருள்27:அருப்புக்கோட்டை நகராட்சி உயர்நிலைப்பள்ளி, நெசவாளர் காலனி தலைமையாசிரியர் அவர்களின் கடிதம் ந.க.எண்.50/2024 நாள் 18.06.2024ன்படி மேற்படி பள்ளியினை உயர்நிலைப்பள்ளியிலிருந்து மேல்நிலைப்பள்ளியாக தரம் உயர்த்த நடவடிக்கை எடுக்கும்படி கோரப்பட்டுள்ளது. தமிழக அரசின் 7.5 சதவீத இட ஒதுக்கீடு உயர் கல்வியை அடைய அருப்புக்கோட்ட நகராட்சி மாணவ மாணவியர் அருகில் உள்ள பந்தல்குடி, கல்லூரணி, மல்லாங்கிணறு பகுதியினை நாடி செய்வதை தடுக்கும் பொருட்டு பெரியார் நகர், அன்பு நகர், கலைஞர் நகர், சத்தியவாணிமுத்து நகர் மற்றும் மணிநகரம் முதலிய பகுதிகளில் வசிக்கும் வருமைக்கோட்டிற்கு கீழே உள்ள மாணவ மாணவியர்கள் பயன்பெறும் நோக்கில் நெசவாளர் காலனி உயர்நிலைப்பள்ளியினை மேல்நிலைப்பள்ளியாக தரம் உயர்த்த நடிவடிக்கை மேற்கொள்வதற்கு மன்றத்தின் அனுமதிவேண்டடப்படுகிறது.

<u>அலுவலகக்குறிப்பு:-</u>

மன்றம் அனுமதிக்கலாம். ந.க.எண்.2681/2024/இ1

**தீர்மான எண்: 1253**

**அலுவலகக்குறிப்பு அனுமதிக்கப்பட்டது**

(ஒம்) திருமதி.சி.சுந்தரலட்சுமி
நகர்மன்ற தலைவர்
அருப்புக்கோட்டை நகராட்சி

ஆணையாளர்
அருப்புக்கோட்டை நகராட்சி